மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்படிப் பயிற்சியிலே அங்கே ஈடுபட்டுத் தொழில்புரிகின்ற கைதிகளுக்கு முன்னர் கொடுக்கப்பட்டதைவிடத் தற்போது ஊதியம் சற்று அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. ஆனால் அது போதிய ஊதியம் என்று சொல்ல மாட்டேன். போதிய ஊதியம் என்று சொல்ல முடியாது. அவர்கள் சிறையிலிருந்து விடுதலை பெற்று வெளியேறிய பிறகு அவர்கள் வாழ்வில் திருந்தி வருமானத்தோடு வாழ வேண்டுமென்பதற்காகக் கடன் உதவி தந்து, தாழ்த்தப்பட்ட மக்கள் போன்றவர்களாக இருந்தால் மானியமும் தந்து தொழில் அமைக்க அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

குளத்தூர் தொகுதியிலுள்ள ஆதிதிராவிட மக்களுக்கு வீடுகள் கட்ட வழங்கப்பட்ட கடன்.

* வினா எண் 412.—திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தொகுதியில் சென்ற ஆண்டு கிராமப்புற வீடுகட்டும் சொசைட்டி மூலம் ஆதிதிராவிட மக்களுக்கு எத்தனை வீடுகளுக்கு கடன் வழங்கப்பட்டது ?

(ஆ) எத்தனை வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தொகுதியில் 1980-81 கூட்டுறவு ஆண்டில் கிராமப்புற வீடு கட்டும் சங்கத்தின் மூலம் வீடு கட்ட 539 ஆதிதிராவிட மக்களுக்கு கடன் வழங்கப் பட்டது.

(ஆ) 393 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன.

திரு. த. மாரிமுத்து : தலைவரவர்களே, ஆதிதிராவிட மக்களில் பெரும்பாலோர் குடியிருந்து வந்த குடிசைகளை அகற்றிவிட்டு வேறு மனைக்கட்டு இல்லாததால் அதே இடங்களிலேயே புதிதாகக் கட்டும் வீடுகளை அமைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. தவணை முறையில் உரிய காலங்களில் வழங்குவதில் மிகவும் தாமதம் ஏற்படுகிறது. இந்தச் சிரமங்களைத் தவிர்த்து கடன் வழங்க ஆரம்பித்தவுடன் வீடுகள் கட்டக் கட்ட இரண்டாம், மூன்றாம் முறை தவணை முறைகள் உடனுக்குடன் கிடைக்க அரசு ஆவன செய்யுமா ?

1982 மார்ச் 8]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தவணை முறையில் இல்லாமல் ஒரேமுறையில் கொடுத்து விட்டால் ஒரே முறையில் செலவு செய்துவிட்டுப் பிறகு வீடு கட்டப் பணம் இல்லாமல் தவிப்பார்கள். அதற்காகத்தான் அந்த அளவிற்கு—முதல் அளவிற்குக் கட்டப்பட்ட அளவிற்கு இவ்வளவு, பிறகு இவ்வளவு கட்ட வேண்டும், பிறகு இவ்வளவு கட்ட வேண்டும் என்று அவர்களுக்குப் பாதுகாப்புக்காகத்தான் தவணை முறையில் பணம் கொடுக்கப்படுகிறது.

திரு. த. மாரிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, வீடு கட்டக் கட்டத் தான் கடன் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் சொல்கிறோம். ஆனால் உடனுக்குடன் கொடுப்பதில்லை. முதல் தவணை கொடுத்து இரண்டாம் தவண வாங்குவதற்குள் ஆறு மாதங்கள் ஆகிறது. ஆகவே, இரண்டாம் தவணையில் வீடு கட்ட முடியாமல், கட்டிய வீடு இடிந்து விடும் அளவிற்குப் போய்விடுகிறது. எனவே, கட்டி முடித்து விட்டால் முடிக்க முடிக்க உடனுக்குடன் மூன்று தவணைகளும் கொடுக்கப்படுமா ? மேலும் கிராமப்புற வீடு கட்டும் சொசைட்டியிலே சென்ட்ரல் கவர்ன்மெண்ட் எய்ட் மூலம் சில வீடுகள் கட்டிக் கொடுக்கக் கடன் கொடுக்கிறார்களாம். அந்த லோனெல்லாம் இரண்டு மூன்று முறை கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே பேராம்பூர், கல்லுப்பட்டி என்ற கிராமங்களிலே முதல் தவணை வழங்கி ஆறு மாதங்களாகியும், இதுவரையில் இரண்டாம் தவணை வழங்காமல் இருக்கக் காரணம் என்ன ? மேலும் வீடுகளின் அளவு இரண்டு அங்குலம், மூன்று அங்குலம் கூடப் போயிருந்தாலும்கூட அந்த வீடுகளுக்கு இரண்டாம் தவணை வழங்க முடியாது என்று அலுவலர்கள் சொல்லிவிடுகிறார்கள். கிராமத்திலுள்ளவர்கள் (மணியடிக்கப்பட்டது) வருடத்திற்கு ஒருமுறைதான் என் கேள்வியே வருகிறது. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாக கேள்வியைப் போடுங்கள்.

திரு. த. மாரிமுத்து : ரொம்ப நன்றி. இந்த அலுவலர்கள் 17½ இன்டு 11½ என்ற அளவிற்கு மீறி இரண்டு அங்குலம், மூன்று அங்குலம் இருந்தாலும் மறுபடியும் அஸ்திவாரத்தை இடித்துவிட்டுப் புதிதாகக் கட்ட வேண்டுமென்று சொல்வதால் வீடு கட்ட முடியாமல் போகிறது. எனவே, சொன்ன அளவில் மேலே இரண்டு அங்குலம், மூன்று அங்குலம் கூடியிருந்தாலும் அந்த வீடுகளைக் கட்டுவதற்கான தவணைகளை வழங்க அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 200 சதுர அடி பரப்பளவிற்குக் கட்டுவதற்கு மதிப்பீடு ரூ. 4,000 என்று சொல்லி, அந்த ரூ. 4,000-ல் 800-ஐ அவர்களே

போட்டுக் கொள்ள வேண்டும், அல்லது ஷ்ரம்தான்—உழைப்பாகப்—போட வேண்டுமென்று சொல்லி, மீதித் தொகை ஆதி திராவிட மக்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அதிலே, ரூ. 1,000 மானியமாகக் கொடுக்கப்படுகிறது. ஆதி திராவிட மக்களுக்குக் கொடுக்கப்படுகிற தொகைக்கு வட்டி இல்லை. அந்த வட்டியை அரசே கொடுக்கிறது. அந்த 200 சதுர அடிக்கு மேல் கட்டிக் கொள்ளவேண்டுமென்று யாராவது நினைத்து, அவர்களுடைய பணத்தைப் போட்டு, அந்த வீட்டைக் கட்ட முன்வந்தால் There is no bar for it பெரிதாகக் கட்டிக் கொண்டு போவதென்றால் எங்களுக்குத் தடை இல்லை. நாங்கள் கொடுக்கும் பணத்தில் 200 சதுர அடியில் கட்டுவது நல்லது— அதுதான் முடியும் என்று சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினருக்குச் சில தகவல்கள் வந்திருக்கின்றன, சில சரியாக இருக்கலாம், சில சரியில்லாமல் இருக்கலாம். எனவே, குறிப்பிட்ட இடத்தைப் பற்றி இந்த இடத்தில் இந்தச் சிரமம் இருக்கிறது என்று அரசுக்குத் தெரிவிப்பார்களானால் அரசு அதைப் பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தகவல் தெரிவித்தால் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்கள் பொருளாதாரத்திலே பின்தங்கியவர்கள் என்பதற்காக இந்தச் சலுகையை அந்த மக்களுக்கு நாம் தருகிறோம். ஆனால், அடித்தளம் போட்டுவிட்ட பின்னாலே கடன் கொடுக்கிறோம். அதற்கும் முன்னதாகக் கடன் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மூர்த்தி அவர்கள் சொல்கிற யோசனை சிறந்த யோசனை. இதைப்பற்றி நிதானமாகப் பரிசீலனை செய்யலாம்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அரசு விதித்திருக்கின்ற பரப்பளவிற்குமேல் அவர்களாக விரும்பிக் கேட்டுக் கொண்டால், அதை அரசு தடை செய்யவில்லை, தொடர்ந்து கடன் வழங்கப் படும் என்று குறிப்பிட்டார்கள். கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் எங்களுடைய் கிளையின் தலைவன் என்ற முறையில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், அமைச்சரிடம் இருந்து அறிய விரும்புகிறேன், குறிப்பிட்ட அளவிற்கு மேல் 1 அங்குலமோ, 2 அங்குலமோ கட்டினால்கூட அதை இடித்து விட்டு மீண்டும் புதிதாகக் கட்ட வேண்டுமென்று அதிகாரிகள் சொல்கிறார்கள். சான்றாக, லால்குடி வட்டத்திலே இதுபோன்ற பிரச்னைகள்

1982 மார்ச் 8]

ஏராளமாக இருக்கின்றன ; எங்களுக்குப் புகார்கள் வந்திருக்கின்றன. ஆகவே, அமைச்சர் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக இப்பொழுது ஒரு பிரச்னை சொல்லப்படுகிற காரணத்தால், அரசு அதைப் பரிசீலனை செய்யும்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்குக் காங்கிரஸ் கட்சி காலத்திலே கட்டப்பட்ட வீடுகள் எல்லாம் இடிந்து விட்டன . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பழைய காலத்திற்குப் போனால், வீண் பிரச்சினை எழும். இப்போது கட்டப்படுவதைப் பற்றிக் கேளுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : உண்மையை சொல்லக் கூடாதா ? அரிசன மக்களுக்கு இதுவரை கட்டிக்கொடுக்கப்பட்ட எந்த வீடுகளுமே உத்தரவாதமாக இல்லை. இப்பொழுது இவர்கள் கொடுக்கிற ரூ. 4,000-லே, ரூ. 700-க்கு மேல் உழைப்பின் மூலம் என்று வைத்திருப்பதால் பல வீடுகள் பேஸ்மென்ட் நிலையோடு நிற்கின்றன ; அவை நிலையாக நிற்பதற்கு, விரைவாகச் செயல்படுத்த அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு திரு. அம்பிகாபதி மிகப் பிரபலமானவர். அவருக்கு எல்லா விஷயங்களும் தெரிந்திருக்கும். இந்த வீட்டை அரசு கட்டுவதில்லை. பெனிபிஷியரீஸ், அவர்களே கட்டுவது. எனவே, அவர் சொல்லும் பிரச்னை அதில் எழவில்லை.

திருச்சி நகர குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள்

*வினா எண் 413—திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகரில் குடிசைப்பகுதி மேம்பாட்டுக்கு ஏதேனும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?